| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **17/01/2024** | முதல் | **21/01/2024** | |
| அறிக்கை எண் : | **005/ 2024** | வெளியீட்டு நாள் : | | **16/01/2024** | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (11.01.2024 **முதல்** 15.01.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –21-01-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/01 | 12/01 | 13/01 | 14/01 | 15/01 | தேதி | நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | நாள்-5 21/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 29 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 30 | 29 |
| 23 | 23 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 21 | 20 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 1 | 1 |
| 84 | 80 | 83 | 88 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 90 | 90 | 80 |
| 55 | 53 | 53 | 53 | 50 | | 40 | 40 | 50 | 40 | 40 |
| 7 | 9 | 7 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 12 | 14 | 16 | 16 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 10 முதல் 16 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19 - 25 ஜனவரி 2024):**

**மழைப்பொழிவு :**

19-01-2024 - 25-01-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு பெரும்பாலும் வறண்ட வானிலேயே நிலவ வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தென்னை, நிலக்கடலை, கால்நடை**

**தென்னை:**

தென்னை விவசாயிகள் கவனத்திற்கு தற்போது ஆங்காங்கே தென்னை மரத்தில் இளம் குரும்பைகள் உதிரும் பிரச்சினை காணப்படுகிறது.

இதனை தவிர்க்க வேர் மூலம் ஒரு மரத்திற்கு 200 மில்லி என்ற அளவில் தென்னை டானிக் கட்ட வேண்டும்.

ஒவ்வொரு 6 மாத இடைவெளியில் மீண்டும் இதனை கொடுத்து குரும்பை உதிர்வதை தடுக்கலாம்.

**நிலக்கடலை:**

நிலவும் பருவச் சூழ்நிலையில் நிலக்கடலை பயிரில் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது.

விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் விளக்குப் பொறி வைத்து அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்து கவர்ந்து அழிக்கலாம்.

அந்துப் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாகும் போது 5 சதம் ( ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50மில்லி ) வேப்பங்கொட்டை சாறு கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளில் வெளிப் புறங்களில் மட்டும் பூச வேண்டும்.